52 மாற்றுத் திறனாளிகள் நலத் துறை	6	–	–
54 வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)	1,26,51	2	–
பெருமொத்தம்	3,761,16,09	384,22,87	1,429,70,02

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) 30–10–2012 அன்று பேரவைக் கூட்டம் இல்லை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று (29–10–2012) நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, நாளை (30–10–2012) செவ்வாய்க்கிழமை அன்று பேரவைக் கூட்டம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 31–10–2012 (புதன்கிழமை) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை முற்பகல் 11–28 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

1. (i) 1–12–1982 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பாகம்–II, பிரிவு–1–ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் இந்து அறநிலையத் துறையின் II(1)/வ.வ.அ.நி/294/82 ஆம் எண் அறிவிக்கையை இரத்து செய்து அதற்குப் பதிலாக, தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின் அனுப்புகை நிறுவனம் ஆகிய நிறுவனங்களாலும் மற்றும் அந்நிறுவனங்களின் கிளைகளாலும் தமிழ்நாடு மாநிலத்தில் செய்யப்பட்ட விற்பனைகளுக்கு செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்தும்; (ii) யாதொரு வணிகர் அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு